RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt21128

# நாட்டுப்புற மக்கள் தேவதை கண்ணகி

**சா. மணிமேகலை** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு- 638012, தமிழ்நாடு, இந்தியா.

# Folk people fairy Kannagi

**S. Manimekalai** [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women, Erode-638012, Tamil Nadu, India.

Corresponding Author:
mithiran3412@gmail.com

Received : 09-09-2020
Accepted : 08-01-2021

**ABSTRACT**

Kannagi, the women of chaste in Tamil Nadu is worshipped by various villages in different names. Kannagi destroyed the city of Madurai and the Pandiyan king during the Tamil month of Aadi and tasted the fruit of success, so the whole month is greatly celebrated worshipping Goddess Amman. Kannagi's worship through the Kawaagu soil which was introduced among the Sri Lankans is practiced till now. As Kannagi, along with her husband flew to heaven by the border of the Cheras Dynasty. Hence Bagawadhi Amman is worshipped in and around Kerala. Kannagi, whose life was devasted by an anklet, triumphed the injustice posed on her husband' death by her chastity and thus established justice in the country is called 'Folk Fairy'. This research aims to prove the above.

**Keywords:** Kannagi, Pandiyan, Bagawadhi Amman, Madurai

## ஆசிரியர் குறிப்பு

திருமதி.சா. மணிமேகலை, திருப்பூர் மாவட்டத்தில் கொடுவாய் வட்டத்தில் வேளாண்குடியில் பிறந்தவர். இளங்கலை முதுகலைத் தமிழ் இலக்கியத்தினை பழனி பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியிலும் ஆய்வியல் நிறைஞர் பட்டத்தினைப் பாரதியார் பல்கலைக்கழகத்திலும் பயின்றவர். தற்சமயம் சிக்கய்ய நாயக்கர் கல்லூரியில் சிறந்த மேடைப்பேச்சாளராகவும் கவிஞராகவும் விளங்கும் முனைவர் சா.சிவமணி அவர்களின் வழிகாட்டுதலில் முனைவர் பட்ட ஆய்வு செய்து வருகின்றார். பெருந்துறை மகாராஜா கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியராக ஒன்பது ஆண்டுகள் பணியாற்றிய இவர் தற்போது வேளாளர் மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் பண்பாட்டின் ஆணிவேராகத் திகழ்கின்றன என்பது உலகறிந்த உண்மை அவற்றுள் பெருங்காப்பியமான சிலப்பதிகாரம் மனிதப் பண்பாடுகளின் உறைவிடமாகத் திகழ்வதோடு பெண்ணின் கற்பெனும் திண்மையே வீரத்தினும் சிறந்தது என்பதனை உணரச்செய்தது. சிலப்பதிகாரம் ஒரு சர்வசமயக் காப்பியம் மட்டுமல்லாது

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்ற கூற்றினை உண்மையாக்கி பத்தினிப்பெண்ணாகிய கண்ணகியைத் தெய்வமாக்கி அன்று முதல் இன்று வரை தமிழகத்தில் மட்டுமல்லாது இலங்கையிலும் கேரளத்திலும் கொண்டாடி வருகின்றனர். மதுரையை அழித்த நாள் தொடங்கி கண்ணகி வழிபாடு வளர்நிலை அடைந்து கிராமங்கள் தோறும் வேறுவேறு பெயர்களில் வழிபடப்பட்டு வந்துள்ளது தமிழகத்தில் கற்பால் வென்ற கண்ணகியைச் சேரநாடாகிய கேரளத்திலும் இலங்கையிலும் தெய்வமாக வணங்கப்படுகிறாள்.

## காற்சிலம்புக் கண்ணகி வழிபாட்டின் தேற்றம்

கண்ணகி சோழநாட்டில் மாநாயக்கன் என்னும் பெருவணிகனுக்கு மகளாகப் பிறந்தவள் திருமகள் போன்ற வடிவம் கொண்ட நற்குணங்கள் நிரம்பியவள் கோவலனை மணந்து இல்லரத்தின் மாண்புகளைத் தவறாது கடைபிடித்தவள். கோவலன் செய்த தவறினால்

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர் கோடலும் இழந்த என்னை"

என்று அற வாழ்வினை sஇழந்ததிற்காகக் கோவலனிடமே வருந்தியவள் கற்புக்கரசியாகத் திகழ்ந்து ஊழ்வினை காரணமாக வாழ்வுதேடிச் சென்ற மதுரையில் கணவன் பொய்குற்றம் சாற்றப்பட்டு கொல்லப்பட்டதால் பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்து

"அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றமாம் என்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே
பொல்லா வடுவினையே செய்த வயவேந்தன் தேவி
கடுவினையேன் செய்வதூஉம் காண்"

(சிலம்பு:வழக்குரை காதை பாடல்-1)

என்று ஆராய்ந்து வழக்குரைக்காத பாண்டியன் அவையில் கூறி கொடும் சினத்தால் மன்னனையும் மதுரையும் தீக்கிரையாக்கி அழித்த பின்னர் தீராத் துயருடன் கண்ணில் நீர் வழிய சேரநாட்டுக் குன்றினில் வேங்கை மரத்தடியில் நின்றவளைக் குன்றக்குறவர்கள் தெய்வமாகப் பார்க்கின்றனர். அவர்களிடம் தன்நிலை கூறும் அந்நேரத்தில் கோவலனோடு தேவர்கள் பூ மாரி பொழிய விமானத்தில் வானுலகம் சென்sற நிகழ்வினை நேரில் கண்ட குன்றக் குறவர்கள் அந்த நிமிடம் முதற்கொண்டு கண்ணகியைக் குல தெய்வமாக வழிபடுகின்றனர் கண்ணகியைக் குல தெய்வமாக ஏற்ற குன்றக் குறவர் அவளிடம் மழையும் விளைச்சலும் நல்வாழ்வும் வேண்டி நிற்கின்றனர். மரத்தடியில் உருவமற்ற நிலையில் குன்றவர்களால் தொடங்கப்பட்ட கண்ணகி வழிபாடு சேரமன்னனால் உருவம் செய்யப்பட்டு கோயில் அமைத்து வழிபடும் பெரும்சிறப்பினை கண்ணகி அடைகிறாள்.

## ஆடிமாதத்தில் கண்ணகி வழிபாடு

கண்ணகி ஒரு தெய்வப் பிறவி என்பதனை உணர்ந்த சேரன் கண்ணகிக்குக் இமயத்திலிருந்து கல் எடுத்து வந்து கண்ணகி சிலையுடன் பத்தினிக்கோட்டம் என்ற பெயரில் கோயில் எழுப்பி விழா கொண்டாடுகிறான் விழாவிற்காக மற்ற நாட்டு அரசர்களுக்கும் அழைப்பு விடுக்கிறான். அவர்களும் கண்ணகியின் கதையினைக் கேள்வியுற்று தங்கள் நாட்டிலும் அவளைத் தெய்வமாக வழிபடத் தொடங்குகின்றனர். கண்ணகி ஆடிமாதத்தில் மாதத்தில் வெள்ளிக்கிழமையன்று மதுரையையும் பாண்டிய மன்னனையும் உக்கிர நிலையில் அழித்து பின் பதினான்கு நாட்கள் நடந்து சென்று சேரநாட்டின் எல்லையை அடைந்து கணவனுடன் விண்ணுலகம் செல்கிறாள். ஆடி மாதம் மதுரை தீக்கிரையாக்கி

பாண்டியனை அழித்த கண்ணகியின் கோபத்தீயிற்குக் காரணமாகிய அநீதி போல் மேலும் தொடரக்கூடாது என்ற எண்ணம் மக்களிடையில் ஏற்பட்டு கண்ணகியைத் தெய்வநிலையில் வைத்துப் போற்றி வாழ்வினைக் காக்கும் அம்மனாக வழிபடுகின்றனர் அதனால்தான். ஆடி மாதம் முழுவதும் அம்மன் மாதமாக அம்மன் கோயில்கள் முழுவதிலும் அவளைச் சாந்தப்படுத்துவதற்காக கூழ் ஊற்றுதல், தீ மிதித்தல் போன்ற விழாக்கள் கொண்டாடப்படுவதை இன்றளவும் கண்கூடாகக் காண்கிறோம்.

கண்ணகி ஆடி மாதம் கணவனை இழந்து வாழ்வினை இழந்ததால் ஆடி மாதத்தில் தமிழகத்தில் மங்கல நிகழ்வுகளைத் தவிர்த்து அம்மன் வழிபாட்டில் ஒன்றி விடுவது கண்ணகியைச் சக்தி வாய்ந்த தெய்வமாகப் பாவித்து வழிபடுவதுதான் காரணமாகும்.

## சித்ராபௌர்ணமியில் கண்ணகி வழிபாடு

சேரநாட்டு வேட்டுவ மக்கள் சித்ரா பௌர்ணமி அன்று கண்ணகியை வழிபடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். விண்ணுலகம் சென்ற கண்ணகிக்குக் சேர மன்னன் கோயில் எழுப்பிய இடம் தமிழ்நாடு கேரள மாநில எல்லையான மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள வண்ணாத்திப்பாறை என்னும் இடமாகும் இம்மலை கடல் மட்டத்திலிருந்து நாலாயிரத்து முந்நூற்று எண்பது அடி உயரத்தில் இருப்பதாகும். கேரள தமிழ்நாடு எல்லைத் தகராறு காரணமாக சித்ரா பௌர்ணமி அன்று ஒரு நாள் மட்டுமே கண்ணகி கோயில் திறக்கப்பட்டு பூசை செய்து வழிபடப்படுகிறது. வழிபாட்டன்று கண்ணகி கோயிலில் தமிழ்நாட்டுக் காவலர்களும் கேரளக் காவலர்களும் மக்கள் பாதுகாப்பிற்காக நியமிக்கப்படுகின்றனர்.

## கண்ணகி வழிபாட்டின் தொன்மை

சங்க இலக்கிய நற்றினைப் பாடலில் (216 வது பாடல்) திருகாவுண்ணி என்பவள் தன்மீது அன்பற்று அயலான் போலாகிவிட்ட கணவனை நினைந்து கவலை கொண்டு வருந்தி பின் தன் ஒரு முலையை திருகியெறிந்து வேங்கை மரத்தின் கீழ் நின்றாளென்று கூறப்படுகிறது இந்தச் செய்தியைப் படிக்கும்போது கண்ணகி வழிபாட்டின் வரலாறு சங்க காலத்துக்கு முற்பட்டதாக இருந்திருக்கலாம். தொன்மைக் காலம் தொடங்கி இருந்து வந்த கண்ணகி வழிபாடானது சிலப்பதிகாரம் தோன்றிய பின் கண்ணகியைப் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் மக்கள் வழிபட்டு வந்திருக்கலாம்.

## கண்ணகி நடுகல் வழிபாடு

மதுரையைக் கண்ணகி அழித் நிகழ்வு நடைபெற்ற நாளன்று பாண்டிய நெடுஞ்செழியனின் தம்பியாகிய வெற்றிவேல் செழியன் கொற்கையில் முகாமிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. தன் நாட்டில் நடந்ததை அறிந்த அவன் பொற்கொல்லனைத் தூக்கிலிட்ட பின் கண்ணகிக்கு நடுகல் அமைத்து வழிபாடாற்றினான்.

## கேரளத்துப் பகவதியான கண்ணகி

கேரளத்தில் பகவதியை வழிபடும் வழக்கம் பரவலாகக் காணப்படுகிறது. பகவதி என்ற பெண் தெய்வம் கிராம மக்களிடம் மிகச் சக்தி வாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள். கேரளத்துப் பகவதி என்று கூறி தமிழகத்திலும் பகவதி வழிபடப்படுகிறாள். “இந்தப் பகவதி வழிபாடு கண்ணகி வழிபாட்டிலிருந்து தோன்றியது என்ற கருத்து தமிழ்நாட்டிலும்

கேரளத்திலும் சில அறிஞர்களிடையில் உள்ளது. மலையாள நாட்டுப்புறப் பாடல்களில் கண்ணகி கதை கூறப்படுகிறது (Sakthivel, 1983).

வடமலையாளத்து விசாரிகாவு என்ற இடத்தில் உள்ள பகவதி கோயிலை இளைய பமவதி என்று அழைக்கின்றனர் இந்தப் பகவதி மிகுந்த சக்தி வாய்ந்தவளாகக் கருதப்படுகிறது. விசாரிக்காவில் பகவதி கோயில் விழாவின்போது மிக முக்கியமான சடங்காகக் காணப்படுவது செட்டியார்கள் என்னும் சாதியினர் செய்யும் சடங்காகும். விழாவின் உற்சவம் செட்டியார்களுக்கு அழைப்பு விடுத்தபின்தான் துவங்குகிறது இவர்கள் சில மந்திரங்களைக் கூறி விழாவினைத் தொடங்குகின்றனர். அவர்கள் கூறும் மந்திரம் தமிழ் மொழியில் கண்ணகி கதையைக் கூறுவதாக உள்ளது.

"ஆதிமுதல் காவேரிப் பூம்பட்டினத்து
ஆயிரவர் வங்கிசத்தில்
ஆரியகண் ணகை அம்மன் ஆகவே தான்
பிறந்து அதிரூபமான பொழுது
தீதிலா கோவிலருடன் பாரியாளாகவும்
சிறிது காலம் சென்ற பின்
திங்கள் முகமாய் வந்து தனிக்காக
மதுரையில் சிலம்பு கூறினாளில்"

### பாடலின் விளக்கம்

காவேரிப் பூம்பட்டினத்தில் ஆயிரஞ்செட்டியார் வம்சத்தில் பிறந்த கண்ணகி கோவலனின் மனைவியாகச் சிறிது காலம் இருந்து மதுரையில் சிலம்பு கூறின நாளில் பாண்டியன் வாசலில் நீராய் எரித்து சோதியானாள் என்பதாகும்.பாடலில் கண்ணகியை கண்ணகை என்று கூறுகின்றனர்.

கண்ணகியின் கதை முழுவதையும் மூன்று பாடல்களில் மந்திரம் என்று கூறி இளைய பகவதியின் உற்சவ விழாவில் செட்டியார்கள் பாடுவதாக தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு என்ற நூலில் பி.எல்.சாமி அவர்கள் பதிவிட்டுள்ளார். கண்ணகி வழிபாடு பகவதி வழிபாடாகக் கேரளத்தில் இரண்டறக் கலந்துள்ளதைச் சான்றுகள் வழி அறிய முடிகிறது (Sami, 1975).

## இலங்கையில் கண்ணகி வழிபாடு

இலங்கையில் கண்ணகி வழிபாடு தொன்மைமிக்க வழிபாடாக நம்பிக்கையுடன் வழிபடப்பட்டு வருகிறது. இலங்கை மக்கள் கண்ணகியைப் பத்தினித் தொய்யோ என்று கூறி கண்ணகி அம்மனாக கோயில் கட்டிக் கொண்டாடுகின்றனர் சிங்கள வரலாற்று நூல்களில் கயவாகு மன்னன் வருடந்தோறும் ஆடி மாதத்தில் பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு விழா எடுத்ததாகக் கூறப்படுகிறது.

கயவாகு மன்னனும் கண்ணகிக்குக் கோயில் எடுத்த சேரன் செங்குட்டுவனும் சம காலத்தவர் என்ற செய்தியைச் சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தில் அறிய முடிகிறது கண்ணகி கோயில் விழாவிற்குக் கயவாகு மன்னனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது விழாவிற்கு வந்த கயவாகு மன்னன் கண்ணகியின் கற்பின் பெருமையைக் கண்டு அவளைத் தெய்வமாகத் தனது நாட்டிலும் வழிபட்டு வந்துள்ளான். இன்றளவும் கண்ணகி வழிபாடு இலங்கை மக்களால் பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களில்

பத்தினிக்கு வழிபாடு நடைபெறுவது மனிதப் பண்பாடுகளை மக்கள் கட்டிக் காப்பதின் அடையாளமாகும் (Srinivasan, 1998).

தாய்த்தெய்வமாக பழங்குடி மக்களால் வழிபடத் தொடங்கிய பத்தினியாகிய கண்ணகியின் வழிபாடு நீலியாகவும் மாரியாகவும் வஞ்சியாகவும் காளியாகவும் மேலும் பல்வேறு பெயர்களில் வழிபடப்பட்ட சிலம்பின் நாயகி கண்ணகி கொண்ட கற்பின் சிறப்பு நம் தமிழ் பண்பாட்டின் மரபாகும்.

"பெண்ணின் பெருந்தக்க ணாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப திண்மையான கற்பு நெறி வழுவாத தன்மையினால் பெண் குலத்திற்கே பெருமை தேடித் தந்தாள் என்பதில் ஐயமில்லை (Thiruvalluvar, 1924).

## முடிவுரை

மக்களுள் மக்களாக வாழ்ந்து அநீதியால் துன்புற்று இறப்பவர்களைத் தெய்வங்களாக வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. அவ்வகையில் கண்ணகி சாதரணப் பெண்ணாகப் பிறந்து, பெண்ணிற்குரிய பெருங்குணங்களோடு வாழ்ந்து, மற்றையோர் செய்யும் தவறுகளால் வாழ்வு முழுதும் துன்பமே உடன்வந்து வாழ்வினை இழக்கின்றாள். அருந்ததி போன்ற கற்பினளாகிய கண்ணகிக்கு ஏற்பட்ட துயரம் இனி எப்பெண்ணிற்கும் ஏற்படக்கூடாது என்ற காரணத்தினாலும் தவறே செய்யாத ஒரு பெண்ணின் கோபத் தீ தொடரக்கூடாது என்பதற்காகவும் கண்ணகியைக் கிராமங்கள் தோறும் பெண்தெய்வமாக, காவல் தெய்வமாக, குலதெய்வமாக வழிபாடு செய்யும் வழக்கம் தொடர்கிறது. நீதிக்காகப் போராடிப் புரட்சி செய்த பெண் தேவதை கண்ணகி என்றென்றும் மக்கள் தேவதையாக மக்கள் மனதில் நிலைத்திருப்பாள்.

## பார்வை நூல்கள்

Sakthivel, S., (1983), Folklore study, Manivasagar Pathipagam, Madurai, India.

Sami, P.L., (1975), Worship of the mother goddess in literature, New Century Book House, Chennai, India.

Srinivasan, R., (1998) Silapthigaram Source and review, Aniyagam, Chennai, India.

Thiruvalluvar, (1924), Thirukkural, South India Saiva Siddhanta Works Publishing Society Ltd, Tirunelveli, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License